**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.23/2026 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. அமித்பாஷா |
| Husband/Father Name | அமானுல்லா |
| Village /Area | ஆற்காடு |
| Taluk | ஆற்காடு |
| Occupation | இரண்டாம் நிலை காவலர் |
| Age | 31 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 02.06.2026.

**(எதிரிகள் 1,3,4 ஆஜர். எதிரி 2 கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் நகர காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். 12.01.2025 அன்று பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கஞ்சா மற்றும் குட்கா போன்ற குற்ற செயல்களை தடுப்பதற்காக வேண்டி உதவி ஆய்வாளர் திரு.பாலாஜி அவர்கள் தலைமையில் ரோந்து பணிக்கு சென்றோம். என்னுடன் முதல் நிலை காவலர் திரு.வெங்கடேசன் ஆகியோர் ரோந்து சென்ற போது உதவி ஆய்வாளர் பாலாஜி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரக்கோணம் ரயில்வே இன்ஜினியரிங் ஒர்க் ஷாப் கட்டிடம் பின்புறம் உள்ள முட்புதரிலும் 4 நபர்கள் அமர்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் கைகளில் ஏதோ எடுப்பதும் வைப்பதும் போன்ற செயலில் ஈடுப்பட்டு கொண்டிருந்தனர். அருகில் சென்றதும் எங்களை பார்த்ததும் 4 நபர்களும் நான்கு திசைகளில் ஓடினார்கள். அதில் ஒருவரை மட்டும் மடக்கி பிடித்த போது அவர் பெயரை மாற்றியும் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தார். பின் அவராகவே அவர் பெயர் சசிகுமார் என்று கூறினார். அங்கு சோதனை செய்த போது பிளாஸ்டிக் கவரில் கஞ்சா மற்றும் 2 அடி நீளமுள்ள கத்தி ஒன்று இருந்தது. உடன் இருந்தவர்களை விசாரித்த போது அவர்கள் எங்களை பார்த்ததும் ஓடிவிட்டதாக கூறினார். அவர்கள் யார் என்று விசாரித்த போது பிரபு, குமரன் மற்றும் மதன்குமார் என்று கூறினார். மேலும் அவரை விசாரித்த போது அரசால் தடை செய்யப்பட்ட கஞ்சாவை வைத்திருப்பது குற்றமா இல்லையா என்று கேட்டதற்கு ஆமாம் என்று ஒப்புக் கொண்டார். மேலும் இதை

நீதித்துறை நடுவர் முன்பு கஞ்சாவை சோதனை செய்வதற்காக அழைத்த போது நீங்களே சோதனை செய்யுங்கள் என்று உங்களுக்கு அனைத்து உரிமையும் உள்ளது என்று சோதனை படிவத்தில் கையெழுத்து இட்டு எங்களிடமிருந்த மின்னனு தராசுவை எடுத்து சோதனை செய்த போது 200 கிராம் கஞ்சா இருந்தது. மேலும் அவரை உதவி ஆய்வாளர் பாலாஜி உத்தரவின் படி குற்றவாளியை காவல் நிலையம் அழைத்து சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம். மேற்படி என்னிடம் விசாரணை செய்தனர். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜிரிலுள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சோதனை படிவத்திலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்துக்களான வீச்சருவாள் மற்றும் கஞ்சா பொட்டலம் ஆகியவற்றை ஆஜர் முதல் எதிரி எங்கள் முன்னிலையில் ஆஜர் படுத்தினார். அவைகள் முறையே **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிறகு முதல் எதிரியை மட்டும் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவம் 12.01.2025 அன்று நடந்தது. அப்போது நான் போலீசாக தான் இருந்தேன். சம்பவ தினத்தன்று Beat 4 ரோந்து பணியில் இருந்தேன். ஒரு Beat ல் இரண்டு நபர்கள் இருப்பார்கள்.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை காரணமாக நாங்கள் 4 பேர் சென்றோம். பண்டிகை தினத்தில் போலீசாரை பாதுகாப்பு நடவடிக்கைகாக வெளியூர் அனுப்புவது வழக்கம் என்று சொன்னால் சரிதான்.

பாதுகாப்புக்கு அனுப்பட்ட போலீசாரை தவிர்த்து அன்றைய தினம் காவல் நிலையத்தில் இருந்தவர்கள் ரோந்து பணிக்கு சென்றோம். தற்போது நான் மாவட்ட SP crime team ல் கடந்த 5 மாதமாக பணியாற்றி வருகிறேன்.

Workshop புது பேருந்து நிலையத்துக்கு அருகில் உள்ளது. Workshop போகும் போது வலது பக்கம் உள்ளது. அதற்கு பின் புறத்திலுள்ள முட்புதிரில் தான் எதிரியை பிடித்தோம்.

உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி தான் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றோம் ரகசிய தகவல் கொடுத்தது யார் என்று எனக்கு தெரியாது.

நாங்கள் மூன்று பேர் தான் சம்பவ இடத்துக்கு மதியம் 1.30 மணிக்கு சென்றோம். நாங்கள் பிடிக்க சென்ற போது ஒருவரை தான் பிடித்தோம். மற்ற

3 நபர்கள் railway track பக்கமாக ஓடிவிட்டனர். வலது பக்கம் railway track இல்லை என்று சொன்னால் சரியல்ல.

அவர்கள் railway track பக்கமாக தான் ஓடினார்கள். முதல் எதிரியை உதவி ஆய்வாளர் தான் பிடித்தார். நாங்கள் பிடித்த எதிரி தப்பித்து ஓடாமல் பார்த்து கொண்டோம்.

ஓடியவர்களை பிடித்தோமா அல்லது பிடித்த நபரை ஓட விடாமல் தடுத்தோமா என்றால் பிடித்த நபரை தான் ஓட விடாமல் தடுத்தோம். உதவி ஆய்வாளர் விசாரித்த போது அங்கு கஞ்சாவும் கத்தியும் இருந்தது.

கஞ்சா கருப்பு நிற பிளாஸ்டிக் கவரில் இருந்தது. துணியால் சுற்றப்பட்ட கத்தி இருந்தது. என்ன நிற துணியால் கத்தி சுற்றப்பட்டிருந்தது என்று எனக்கு நியாபகம் இல்லை.

அந்த கத்தியினுடைய நீளம் கைப்பிடியுடன் சேர்த்து 2 அடி. கத்தியினுடைய கைப்பிடி கட்டையால் ஆனது. கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா தான் என்பதை உறுதி செய்ய சான்றிதழ் ஏதாவது பெறப்பட்டதா என்றால் சோதனை படிவத்தில் தான் முதல் எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது.

கைப்பற்றப்பட்ட பொருள் உறுதி செய்ய உரிய நபரிடம் தான் சான்றிதழ் பெற வேண்டும் என்று தெரிந்து இருந்தும் எந்த காரணத்தினால் சோதனை படிவத்தில் முதல் எதிரியுடைய கையொப்பம் பெறப்பட்டது என்றால் உதவி ஆய்வாளர் கூறியதன் அடிப்படையில் பெறப்பட்டது.

கஞ்சாவை மின்னனு தராசு மூலம் அளந்தோம். எப்போதும் சோதனைக்கு செல்லும் போது மின்னனு தராசு மற்றும் சோதனை செய்யும் பொருட்களை எடுத்து செல்வோமா என்றால் ஆமாம்.

அந்த கஞ்சாவை அதே இடத்தில் வைத்து அளந்து தனி தனியாக காவல் துறை முத்திரையிட்டு காவல் நிலையத்துக்கு எடுத்து வந்தோம். சம்பவ இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம், புகார் மற்றும் மகஜரை உதவி ஆய்வாளர் பாலாஜி தான் தயார் செய்தார்.

அனைத்தையும் சம்பவ இடத்திலேயே தயார் செய்து அங்கேயே print எடுக்கப்பட்டது. சம்பவ இடத்திலேயே பிற்பகல் 1.30 மணியிலிருந்து 4.30 மணி வரை விசாரணைக்காக இருந்தோம் என்று சொன்னால் சரிதான்.

2 மணி நேரம் நாங்கள் புதரிலேயே இருந்ததால் பொது மக்கள் யாரும் சாட்சியாக வரவில்லை என்பதால் நாங்களே சாட்சியாக இருந்தோம். 2 முதல் 4 எதிரிகளை 20.01.2025 அன்று கைது செய்ததற்கான காரணம் எனக்கு தெரியாது.

முதல் எதிரி சசிகுமாரை காவல் நிலையம் வரவழைத்து தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான் என்று முதலில் சாடசி கூறிவிட்டு பிறகு சம்பவ இடத்திலிருந்து வரவழைக்கப்பட்டு வழக்கு போடப்பட்டது என்று கூறினார்.

மற்ற 3 எதிரிகளையும் காவல் நிலையம் வரவழைத்து தான் வழக்கு

பதிவு செய்தோம் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. உதவி ஆய்வாளர் தன்னிச்சையாக Arms Actன் கீழ் பதிவு செய்த வழக்குகளின் எண்ணை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

முதல் எதிரியை கைது செய்தவுடன் அவர் அம்மாவுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. மேல் அதிகாரிகள் கூறியதன் அடிப்படையில் முதல் எதிரியின் மீது சரித்திர பதிவேடு இருப்பதால் அவர்கள் தாக்கல் செய்த வழக்கிற்கு நானும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.06.02 17:26:02 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.